Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 21 ஆம் நாள் துல்கஃதா 17 (3-5-61) புதன்கிழமை இதழ் 67

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

தோட்டத்தில்

# 11 பேர் கைதாயினர்

## தடுப்புக்காவலில் கல்முனை எம். பி.

கொழும்பு, செவ்வாய்

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம், கல்முனை எம். பி. திரு. எம். ஸி. அஹமத் இருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் 150 துப்பாக்கிகள், அதிகாரிகளிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

★ ராகலைக்கு அருகிலுள்ள மகாஓயா தோட்டத்தில் கல்வீச்சு நடைபெற்றது. இது சம்பந்தமாக 11 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

நேற்று பிரதிநிதிகள் சபையில் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மசோதாவின், 2வது பரிசீலனைபற்றி விவாதம் ஆரம்பமாவதற்குமுன், கல்முனை எம். பி. திரு எம். ஸி. அகமத், கோப்பாய் எம். பி. திரு எம். பாலசுந்தரம் ஆகியோர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாய்க் கூறும் பிரதமரின் அறிக்கையை சபாநாயகர் வாசித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுவாக அமைதி நிலவுகிறதென்றும், அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் திறக்கப்பட்டிருக்கின்றன என்றும், பாடசாலைகள் இயங்கி வருகின்றன என்றும் பாதுகாப்பு-வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

"மட்டக்களப்பில் 150 துப்பாக்கிகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. ராகலைக்குச் சமீபமாக மகாஓயா தோட்டத்தில் கல்வீச்சு சம்பவம் ஒன்று நடைபெற்றிருக்கிறது. இது சம்பந்தமாக 11 பேர் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். வேறு சம்பவம் எதுவுமில்லை" என்றும் அறிக்கை கூறுகிறது.

அரசாங்கப் பாராளுமன்றக் குழு நேற்று திரு. ஸி. பி. டி. சில்வா தலைமையில் கூடியது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமைபற்றி அதில் ஆராயப்பட்டது. அங்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பிரதமர் விளக்கினார். தினமும் உத்தியோக ரீதியாக வெளியிடப்படும் அறிக்கையில் உண்மைநிலை தெரிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்தார். ஏற்கனவே தாம் மக்களுக்கு விடுத்த அறிவுரைகளை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் வீண் வதந்திகளுக்கு இலக்காகாமலிருக்கும்படியும் பிரதமர் கூறினார். தங்கள் தங்கள் தொகுதிகளில் பரப்பப்பட்ட வதந்திகள் பற்றியும், இதர விஷயங்கள்பற்றியும் எம். பி.க்கள் பாராளுமன்றக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

## திரு. சம்பத் விலகியது "பெரிய நஷ்டம்"

### தி. மு. க. தலைவர் கருத்து

காஞ்சிபுரம், மே 2

திரு. சம்பத், தி.மு. கழகத்திலிருந்து வெளியேறியது, தமது கட்சிக்குப் பெரிய நஷ்டமென்றும், தமது மனதில் இதனால் ஏற்பட்ட புண் ஆறுதென்றும், திரு. அண்ணாத்துரை, இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தாம் எதேச்சாதிகாரமாக எதுவும் செய்யவில்லை என்றும், உண்மையான வேற்றுமை ஏதும் இருந்தால் பேசித் தீர்த்துக் கொள்ளலாமென்றும், 'திராவிட நாடு' யோசனைக்கு திரு. சம்பத் மூலகர்த்தாவென்றும், "வட இந்திய ஏகாதிபத்தியத்துடன் உயிருக்கு மன்றுடும் போர் நடக்கையில், கட்சியிலிருந்து விட்டு விட்டு ஓடுவது" நேர்மையா? என்றும் அவர் கேட்டார்.

## மகாரகம பயிற்சி பாடசாலை

கொழும்பு, செவ்வாய்

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மகாரகம அரசாங்கப் பயிற்சிப் பாடசாலை மே 8ம் திகதி திறக்கப்படமாட்டாது எனக் கூறப்பட்டுள்ளது. திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. அரசாங்க சிரேஷ்ட பாடசாலையும் திறக்கப்படமாட்டாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## நியமன எம். பி. மரணத்துக்கு அனுதாபம்

கொழும்பு, செவ்வாய்

நியமன அங்கத்தினர் திரு. ரொஸ்லின் கொக் மரணமடைந்ததை முன்னிட்டு ஜனப் பிரதிநிதிகள் சபை ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியது. சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா, அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையைக் கொண்டு வந்தார். பிரேரணையின் வாசகம் அவரது குடும்பத்துக்கு அனுப்பப்பட்டது.

—

## இந்தியப் பெண்ணுக்கு லெனின் பரிசு

ஆபிரிக்க — ஆசிய ஒற்றுமைச் சங்கத்தின் தலைவரான திருமதி ராமேச்வரி நேருவுக்கு லெனின் சமாதானப் பரிசு வழங்கப்பட்டுள்ளதாக மாஸ்கோ செய்தி கூறுகிறது.

## லாவோஸின் ஒரு பகுதியில் சண்டை நின்றது

### ஓரிரு தினத்தில் முழுதும் நிற்கும் என நேரு கருத்து

புதுடில்லி, மே 2

லாவோஸில் இரு பகை துருப்பு பிரதிநிதிகளுக்கு மிடையே முதலாவதாகச் சந்திப்பு நிகழ்ந்ததைத் தொடர்ந்து ஒரு பகுதியில் சண்டை நின்றிருக்கிறது.

இன்று டில்லியில், லாவோஸ் பற்றி பிரதமர் நேரு நிருபர்களிடம் பேசுகையில் ஒன்றிரண்டு நாட்களில் லாவோஸ் பூராவும் சண்டை நிற்கும் எனத் தமக்குக் கிடைத்துவரும் தகவல்களிலிருந்து தெரிவதாகக் கூறியிருக்கிறார்.

"ஜெனிவா மகாநாட்டில் 14 நாடுகளில் ஒன்றான கம்போடியா கலந்துகொள்ளாதென அந்நாட்டு மன்னர் அறிவித்திருப்பதாய்ப் படித்தேன். மகாநாடு நடைபெறுவதைப் பாதிக்கும் இந்த முடிவை கம்போடியா மாற்றிக்கொள்ளும் என நம்புகிறேன்" என்றும் அவர் கூறினார். சண்டை நிற்குமுன் லாவோஸ் சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷன் அங்கு போகக் கூடாது என ரஷ்யா கூறியிருப்பதுபற்றி நேரு பேசுகையில் எவ்வளவு சீக்கிரம் அங்கு கமிஷன் போக முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்றார்.

இன்று புதுடில்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதர் திரு. நேருவைச் சந்தித்து லாவோஸ்பற்றிப் பேசினார். வாஷிங்டனில் ஜனாதிபதி கென்னடி, தமது தேசிய பாதுகாப்பு கமிஷனைக் கூட்டி லாவோஸ்பற்றி ஆலோசித்தார்.

## கியூபா சோஷலிஸ்ட் நாடாக பிரகடனம் செய்யப்படும்

### மேதினக் கூட்டத்தில் பிரதமர் பிடல்காஸ்ட்ரோ அறிவிப்பு

ஹவானா, மே 2

கியூபாவை ஒரு சோஷலிஸ்ட் நாடாக பிரதமர் பிடல்காஸ்ட்ரோ பிரகடனப்படுத்தியிருக்கிறார். இதுசம்பந்தமான விரிவான பிரகடனம் ஒரு சில தினங்களில் வெளிவரும் என நேற்று மேதினக் கொண்டாட்டக் கூட்டம் ஒன்றில் அவர் அறிவித்தார்.

ஒருசிலசிறியஉடைமைகளைத் தவிர சகல உடைமைகளும் தேசியமயமாக்கப்படும் என்றும், இலவசக்கல்வித்திட்டம் அமுலாக்கப்படும் என்றும் காஸ்ட்ரோ தெரிவித்தார். தற்போது தொழிலாளர் வகுப்பினர்தான் கியூபாவில் அதிகாரத்தில் இருக்கிறார்கள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

"அண்டையிலுள்ள கியூபா சோஷலிஸ்ட்நாடாய் இருப்பது அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை என்றால், எங்களுக்கும் அண்டையில் முதலாளித்துவம் இருப்பது பிடிக்கவில்லை. ஆனால் போர்தொடுக்கும் நடவடிக்கையில் இறங்கிநியூயார்க் நகரத்தை மற்றோர் "ஹிரோஷிமா" வாக ஆக்கவேண்டாம் என அமெரிக்காவுக்குக் கூற விரும்புகிறேன்" என்றும் காஸ்ட்ரோ குறிப்பிட்டார்.

## இந்தியச் செய்திகள்

1951-ம் ஆண்டுமுதல் இதுவரை, நிலமற்ற இந்திய விவசாயிகளுக்கு 78 லட்சம் ஏக்கர் நிலம் விநியோகிக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

நிலமற்ற 7 லட்சம் குடும்பங்களுக்கு 50 லட்சம் ஏக்கர் நிலத்தை வழங்குவதுபற்றிய ஒரு திட்டம் சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது.

∴ ∴ ∴

புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய-கீழ்க்கோடிப் பகுதிக்கான உல்லாசப்பிரயாணிகள் மகாநாடு முடிவடைந்தது.

∴ ∴ ∴

பாகிஸ்தான் பொலிசார், கடந்த ஏப்ரல் 16ம்தேதி 6 இந்திய மீன்பிடிக்காரர்களைக் கடத்திச்சென்றதை முன்னிட்டு கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஆட்சேபம்தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

∴ ∴ ∴

ஒரிஸா ராஜ்ய இடைத் தேர்தலில் கணதந்திர பரிஷத் கட்சி, 120 ஸ்தானங்களில் போட்டியிடும். அங்கு மொத்த ஸ்தானங்கள் 140 ஆகும்.

∴ ∴ ∴

இந்திய மலையேறும் போட்டி அன்னபூரண சிகரத்தை வெற்றிகொள்ள மேற்கொண்ட முயற்சியைக்கைவிட்டுவிட்டது.

∴ ∴ ∴

பிரபல விஞ்ஞானி டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் சென்னையில் கம்பன் சங்கத்தைத் தொடக்கிவைத்தார். திரு டி. எம். நாராயணசாமிப்பிள்ளை இவ்விழாவுக்குத் தலைமைதாங்கினார்.

∴ ∴ ∴

திரு. வி. சுப்ரமண்யநாடார், நேற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவி ஏற்றார்.

∴ ∴ ∴

புதுச்சேரியின் புதிய கமிஷனர் திரு. தத், நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

∴ ∴ ∴

சென்னைப் பிரதம நீதிபதி திரு. பி. வி. ராஜமன்னார் ஓய்வு பெறுவதைத்தொடர்ந்து மறு அறிவித்தல்வரை பிரதம நீதிபதியாகக் கடமையாற்றும்படி திரு. எஸ். ராமச்சந்திரஐயரை ராஷ்டிரபதி நியமித்துள்ளார்.

## அமெரிக்க வானவெளி முயற்சி ஒத்திவைப்பு

கேப்கார்னிவல், மே 2

அமெரிக்கா,வானவெளி மனிதனை இன்று அனுப்பவிருந்த முயற்சியை, காலநிலை சீராய் இல்லாததால் 48 மணி நேரத்துக்கு ஒத்தி வைத்தது. அமெரிக்க வானவெளிப் பிரயாணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் 37 வயதான அலன் ஷெப்பர்ட் என்பவராவர். 2ம் உலக யுத்த வீரரான அவருக்கு இரு புதல்விகள் உள்ளனர், அவர் ஒரு கடற்படை பட்டதாரியுமாவார்.

## மணிவாக்கு

தின்னவரும் புலி தன்னையும் அன்
பொடு சிந்தையிற் போற்றிடுவாய்
—நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுருவாயி
னள்
அவளைக் கும்பிடுவாய்—
நன்னெஞ்சே!
—அமரகவி பாரதியார்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
சித்திரை மீ 21 உ. (3-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## காரணம் என்ன?

விசாக விழாவைத் தழுவி டாக்டர் மலலசேகரா வெளியிட்டுள்ள ஒரு நற்செய்தியில், நாட்டின் இன்றைய நிலைமையைச் சீர்செய்வதற்கான புத்தர் பிரானின் போதனை ஒன்றை நினைவு கூருகின்றார்.

"எமது அழகான நாட்டில் பகைமையும் வேற்றுமையும் நிலைகொள்வதானால் அதற்குக் காரணம் ஏதாவது இருக்கத்தான் வேண்டும். காரணம் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெற மாட்டா தென்பது புத்தர்பிரானின் பொன்மொழி. எனவே எமது நாட்டில் பகைமையும் வேற்றுமையும் நிலைகொள்வதற்குரிய காரணம் என்னவென்பதைக் கண்டறிய நாம் உறுதிகொள்ள வேண்டும். முதலில் காரணங்களைக் கண்டறிந்தபின், வேற்றுமையையும் பகைமையையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம். வேற்றுமை இருக்கும் இடத்தில் அமைதியிருக்க முடியாது. அமைதியில்லாமல் மகிழ்ச்சி இருக்கமுடியாது.

"எவ்வித வரையறையுமில்லாமல் நல்லெண்ணம் காட்டவும் இரக்கம் காட்டவும் நினைவுகொண்டு, இதயத்தில் சாந்தியும், நல்லெண்ணமும் காண்போமாக. எங்கள் வாழ்வில் பங்குகொள்ளும் மற்றவர்களும் சாந்தியும் நல்லெண்ணமும் கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க நாம் தீர்மானிப்போம். இவ்வித உணர்விலே எவர்மீதும் வெறுப்போ பகைமையோ இருக்க முடியாது" என்று டாக்டர் அறிவுறுத்துகின்றார்.

இலங்கையிலே இன்றைய சூழ்நிலைமோசமாக இருப்பதற்குக் காரணம் என்ன? பிரதமர் சிறிமாவோ, மே தின விழாவிலே செய்த பிரசங்கம் இதை ஓரளவு விளக்குகின்றது. "இன்று நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. மொழிப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை இவற்றுக்கெல்லாம் தீர்வுகாண வேண்டும்" என்கிறார். இப்பிரச்சினைகளில் முதலாவதாக மொழிப் பிரச்சினையையே அவர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. மொழிப்பிரச்சினைதான் இன்றுள்ள மோசமான சூழ்நிலைக்கு முக்கியமான காரணமாகும். காரணத்தை அறிந்தபின் அதை எப்படித் தீர்ப்பதென்பது முக்கிய கேள்வி.

"நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில்தான் இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு அடங்கியுள்ளதென்பது எனது திடமான நம்பிக்கை" என்று அதே பேச்சில் கூறுகின்றார் பிரதமர். ஆனால் நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடைய வேண்டுமாயின், சமூக ஒற்றுமையும் நல்லுறவும் அவசியமென்றும், அவ்வித நல்லுறவை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் செய்யுமென்றும் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டது. சமூக நல்லுறவு இன்று மிக மோசமடைந்துள்ளதென்றால் அதற்குக் காரணம் மொழிப் பிரச்சினைதான். முதலில் மொழிப் பிரச்சினையைச் சமுகமாகத் தீர்த்தாலே நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைவதற்கான எந்த முயற்சியும் பலிக்க முடியும். இதைப் பிரதமரும் நன்குணர்வார். ஆகவே இன்றைய மோசமான நிலைமைக்கு முக்கிய காரணமான மொழிப் பிரச்சினையை முதலில் தீர்ப்பதாயின், மற்றப் பிரச்சினைகள் தீர்வதற்கான சூழ்நிலையும் வழியும் பிறப்பதாக இருக்கும்.

# திருநெல்வேலிப் பண்ணையில் நடைபெறும் விவசாய முயற்சி

## மிளகாய், வெங்காயம், புகையிலை காய்கறி பயிரிடப்படும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருநெல்வேலி விவசாயப் பண்ணையின் பெரும் பகுதி மிளகாய், வெங்காயம், புகையிலை, காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்றாற் போல நிலம் பண்படுத்தப்பட்டு, உரம் போடப்பட்டு வருகிறது.

திருநெல்வேலிப் பண்ணை பெண்களுக்கான மத்திய பயிற்சி நிலையம் மட்டுமல்லாது, ஆராய்ச்சி நிலையமாகவும்விளங்குகிறது. பிரதானமாக, விளைச்சல் பற்றி அங்கு ஆராயப்படுகிறது. மிளகாயைப் பொறுத்தவரை பூச்சி அரிப்பிலிருந்து அவைகளைப் பாதுகாக்க உரிய கவனம் செலுத்தப்பட்டால், ஏக்கருக்கு 4000 அந்தர் உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்குத் தேவையான வெங்காயத்தில் 75 சத விகிதம் யாழ்ப்பாணத் தீப கற்பத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. மிளகாயின் விஷயத்திலும் இந்தச் சாதனையை அடையமுடியும்.

உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஏராளமான நிலம் இங்கிருக்கிறது. அவைகளைச் சரியானபடி பயன் படுத்தினால் பெருமளவில் இறக்குமதியைக் குறைக்க முடியும்.

சிகரெட் புகையிலை உற்பத்தி 42 கூட்டுறவு உற்பத்தி சங்கங்களாலும், திருநெல்வேலிப் பண்ணையினாலும் மேற்கொள்ளப்படுகிறது. இப் புகையிலையின் விளைச்சலையும் தரத்தையும் அதிகப்படுத்த திருநெல்வேலிப் பண்ணை முயற்சி செய்து வருகிறது.

## தொழிற் சங்க பயிற்சி பெற்றுத் திரும்பினர்

நாவலப்பிட்டி, மே 2

நுவரெலியா மாவட்டக் காரியாலய உதவிப் பிரதிநிதி திரு. எஸ். ரெங்கநாதன், இ. தொ. காங்கிரஸ் தலைமைக்காரியாலய குமாஸ்தா திரு. எம். எஸ் ஆரோக்கியநாதன் ஆகிய இருவரும் கல்கத்தாவில் 3மாதம் தொழிற்சங்கப் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர். அகில உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆதரவில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.

## கஞ்சாகடத்திய கார் கைப்பற்றப்பட்டது

அக்கரைப்பற்று, மே 2

மாத்தறையிலிருந்து அக்கரைப்பற்றுக்கு கஞ்சா கடத்திச் செல்வதாக பொலிசார் சந்தேகித்ததின் பேரில் தற்பொழுது இவ்விடங்களில் அவர்கள் தீவிரகவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஒரு வாரத்தில் அவர்கள் கடத்திய பலகஞ்சா மூடைகளை கடத்திச்சென்ற இரு புதிய கார்களைக் கைப்பற்றினர்.

## மாடிக் கட்டடங்கள் இடிந்து விழுந்தன

நாவலப்பிட்டி, மே 2

நாவலப்பிட்டி நகர மத்தியிலுள்ள சந்திக்கு அருகாமையில் இரு மாடிக் கட்டடங்கள் இன்று மாலை இடிந்து விழுந்தன. உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை. கடந்த சிலதினங்களாக இப்பகுதியில் பலத்தமழை பெய்து வந்ததே இதற்குக்காரணமெனத் தெரிகிறது.

## "முற்போக்குக் கொள்கையை ஆதரிப்போம்"

கொழும்பு, மே 2

"அரசாங்கம் எடுக்கும் எல்லாவித முற்போக்கு நடவடிக்கைகளுக்கும் மக்கள் ஐக்கிய முன்னணி ஒத்துழைப்பு அளிக்கும். ஆனால் இக்கொள்கையினின்றும் அரசாங்கம் தவறினால், உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கைகளையும் மக்கள் ஐக்கிய முன்னணி எடுக்கத் தவறாது" என்று நேற்று ஹைட் பார்க்கில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் அரசாங்கத்தில் குற்றம் கண்டு அதை வெளிப்படுத்துவது அவசரகால நிலைமையின் சட்டங்களுக்கு முரணானது என்றும் ஆனால், மே தினத்தை ஒரு விடுமுறை தினமாக்கியதும் மற்றும் மக்களுக்கு மகிழ்ச்சியையும் முன்னேற்றப் பாதையையும் உண்டாக்கியதும் ஓர் மக்கள் ஐக்கிய முன்னணிதான் என்பதை இந்நாட்டு மக்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்றும் திரு. பிலிப் தெரிவித்தார்.

டாக்டர் டபிள்யு. எஸ். கருணாரத்தின பேசுகையில் நாட்டைப் பிரிக்க எடுக்கும் எந்த முயற்சியையும் மக்கள் ஐக்கிய முன்னணி அனுமதிக்காது என்றார்.

## அனுராதபுரத்துக்கு விமான சேவை

அனுராதபுரம், மே 2

பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவரும் 29-ம் திகதி கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு விமான சேவையை ஆரம்பித்து வைப்பார்.

கைத்தொழில், உள்நாட்டு, கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா விமானப் படையினர் விமானக் காட்சி அணி ஒன்றை அன்று நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

உல்லாச விமான சேவையும் அன்று இருக்கும்.

## 1,600 மைல் செல்லும் ஏவு கருவி

நியூயோர்க், மே 2

ஏவு கருவிகளை அதிக தூரமளவு விடுவதில் அமெரிக்கா எடுத்த பெரும் முயற்சியில், 1,600 மைல் செல்லக் கூடிய புதிய ஏவு கருவிகளை அமெரிக்கா கண்டுபிடித்துள்ளது என்று ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

## 'கியூபா ஒரு சோஷலிஸ்ட் நாடு'

ஹவானா, மே 2

'கியூபா ஒரு சோஷலிச நாடு' என்று கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ நேற்று அறிவித்தார். சோஷலிஸ சகாப்தத்தில் கியூபா புகுந்துவிட்டது என்று டாக்டர் காஸ்ட்ரோ அறிவித்தார்.

## கடும் மழை

காரைதீவு, மே 2

கல்லோயா பள்ளத்தாக்கைச் சேர்ந்த உகனை, அம்பாறை, இங்கினியாகலை ஆகிய இடங்களில் கடந்த சில தினங்களாக மழை ஓயாது பெய்து வருகிறது.

மழை தொடர்ந்துபெய்தால், வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என ஓர் வதந்தி உலாவுகிறது.

## இயந்திர தச்சுத் தொழிற்சாலை

காத்தான்குடி, மே 2

குடிசைக் கைத்தொழில் இலாகா கல்லடி என்னுமிடத்தில் ஓர் இயந்திரத் தச்சுத் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

இத் தொழிற்சாலையில் பயிற்சிபெற பல இளம் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு உபகாரச் சம்பளமும் வழங்கப்படுகின்றது.

## யோகாசனப் பயிற்சியும் சமயபாடமும்

காத்தான்குடி, மே 2

பிரமச்சாரி ஓங்கார சைதன்யரின் உதவியுடன், மண்முனை வடகிழக்கு வடபகுதிக் கிராமச் சங்க எல்லைக்குட்பட்ட மக்களுக்கு ஓர் யோகாசன பயிற்சி வகுப்பையும், சமயபாட வகுப்பையும் ஒழுங்கு செய்ய பல சைவப்புலவர்கள் முன்வந்துள்ளனர்.

## வாழைச்சேனைப் பகுதிக்கு மின்சாரம்

வாழைச்சேனை, மே 2

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரத்தை விநியோகம் செய்வதற்கு கல்லோயா மின்சார அபிவிருத்திச்சபை முன்வந்து அதற்கான இணைப்பு வேலைகள் யாவையும் பூர்த்தி செய்துள்ளது. அடுத்த மாத இறுதிக்குள் காகித தொழிற்சாலைக்கு கல்லோயா மின்சாரம் கிடைக்கும்.

வாழைச்சேனை மக்களின் நீண்டநாள் கோரிக்கையையடுத்து கோறளை மத்திய கிராமச் சங்கத்தினர் வாழைச்சேனைப்பகுதிக்கு மின்சாரம் விநியோகம் செய்யுமாறு கல்லோயா மின்சார அபிவிருத்தி சபையை வேண்டிக் கொண்டனர். அதன்பயனாக கல்லோயா மின்சார அபிவிருத்திச்சபை வாழைச்சேனைப் பகுதிக்கும் மின்சார விநியோகம் செய்வதற்கு முன்வந்துள்ளது.

## உடுப்பிட்டி றேஞ்சேஸ் வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

திங்கள் பிற்பகல் உடுப்பிட்டி றேஞ்சேஸ் கோஷ்டியினருக்கும் நெல்லியடி விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே திங்கள் பிற்பகல் வதிரியில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் றேஞ்சேஸ் 2-0 ஆக வெற்றிபெற்றனர். றேஞ்சேஸ் கோஷ்டியில் இராஜலிங்கம், குகதாஸ் என்போரும், நெல்லியடிக் கோஷ்டியில் கனகசுந்தரமும், வி. எஸ். பொன்னம்பலமும், தவராஜாவும் நன்றாக விளையாடினர்.

## விமானத்திலிருந்து குண்டுவீச்சு
### அங்கோலாவில் நடவடிக்கை

லண்டன், மே 2

அங்கோலாவில் சுதந்திரம் கோரிக் கிளர்ச்சி செய்யும் தேசியவாதிகளை நசுக்குவதற்காக விமானத்திலிருந்து குண்டுவீசப்பட்டதாகவும் யந்திரப் பீரங்கிகள் கொண்டு மக்களைச் சுட்டுத்தள்ளுவதாகவும் அங்கிருந்து கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

## ஐயாறன் எழுதுவது

"தினமின" என்ற சிங்கள தினசரிப் பத்திரிகையில், "வடக்கு, கிழக்கு சரித்திரம்" என்ற உபதலையங்கம் ஒன்று வெளியாகியுள்ளது. அதன் சாராம்சத்தை இங்கு தருகிறேன்.

"1505ம் வருடம் போர்ச்சுகீயர்கள் இலங்கை வந்தபோது, யாழ்ப்பாணமும் மன்னாரும் சுதந்திர ராஜ்யமாக இருந்தன. ஆனால் திருக்கோணமலை, மட்டக்களப்பு பற்றி சரித்திரம் இப்படிக் கூறவில்லை.

1330ம் வருடம் ஆரிய சக்கரவர்த்தி யாழ்ப்பாண ராஜ்யம் அமைத்தார். ஆனால் கம்பளை ராஜா அவரது அதிகாரத்துக்கு முட்டுக்கட்டை போட்டார். அதனால்தான் ஆரிய சக்கரவர்த்தியின் ராஜ்யம் யாழ்ப்பாணம், மன்னார் இத்துடன் நின்றது. 1450ம் வருடம் சபுமால் இளவரசர் யாழ்ப்பாண மன்னரைத் தோற்கடித்தார். பின்னர் ஆறுவது பராக்கிரமபாகு இலங்கை அனைத்துக்கும் மன்னரானார்.

1470ல் சபுமால் இளவரசர், கோட்டே ராஜாவாகி 6வது புவனேகபாகு என்ற பெயர் தாங்கினார். மீண்டும் யாழ்ப்பாணத்திலே சக்கரவர்த்தி அதிகாரம் பெற்று, சுதந்திர ராஜ்யத்தை அமைத்தார்.

1619ம் வருடம் போர்ச்சுக்கீயர் தமிழ் மன்னரைத் தோற்கடித்ததும், யாழ்ப்பாண ராஜ்யமும் முடிவு பெற்றது. திருக்கோணமலை, மட்டக்களப்பு இவை தமிழருக்குச் சொந்தமென்று சரித்திரத்தில் காணவில்லை. இப்பகுதிகள் சிங்கள ராஜ்யத்துக்கே சொந்தமென்று போர்ச்சுக்கேயரும், டச்சுக்காரரும் ஒப்புக் கொண்டுள்ளனர். சிங்கள மன்னரான விமல தர்ம சூரிய, டச்சு காப்டன் டேவர்த்தைச் சந்திக்க மட்டக்களப்புக்குச் சென்றிருக்கிறார். மட்டக்களப்பிலும், திருக்கோணமலையிலும் கோட்டைகளைக் கட்ட சேனரத் மன்னர் டச்சுக்காரருக்கு அனுமதியளித்தார்.

இந்தச் சாட்சியங்களின்படி, புத்தளம், திருக்கோணமலை, மட்டக்களப்பு முதலிய பகுதிகள் சிங்கள ராஜ்யத்துடனேயே தொடர்ந்து 1766ம் வருடம் வரை சேர்ந்திருந்ததென்பது தெளிவு. இந்தப் பகுதிகளில் எதுவும் ஒருபொழுதும் யாழ்ப்பாண சக்கரவத்தியின் ராஜ்யத்தைச் சேர்ந்திருக்கவில்லை".

* * *

இச்சமயத்திலே இத்தலையங்கத்தை அப்பத்திரிகை ஏன் எழுதவேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. யாழ்ப்பாணம்,மன்னார் இவற்றைசுதந்திர தமிழ்ராஜ்யமாகப் பிரித்து, மற்றப்படி மட்டக்களப்பு,திருக்கோணமலை இவற்றைச் சிங்கள ராஜ்யத்தில் சேர்க்க வேண்டுமென்ற நோக்கமா?

நாமிருப்பது ஜனநாயக யுகம். இத்தீவிலுள்ள ஒவ்வொருவருக்கும் இலங்கை அனைத்தும் உரிமையாகும். எல்லாரும் இந்நாட்டுமன்னர். பழைய பாடாவதி வகுப்புவாதக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு, ஜனநாயகக் கண் கொண்டு பார்த்தால்தான் நாடு ஒற்றுமையாக முன்னேற முடியும் அல்லவா?

* * *

நேற்றுப் பள்ளிக்கூடங்கள் திறந்தாயின. வங்கிகளும் திறந்து வழக்கம்போல் வேலைகளெல்லாம் நடந்துவருகின்றன. பெட்ரோல் கட்டுப்பாடும் நீங்கிவிட்டது. எல்லாம் அமைதியாகவே உள்ளனவென்று தினசரி, அரசாங்கம் அறிவிக்கின்றது. அப்படியாயின் ஏன் இங்கு இந்த ஊரடங்குச்சட்டம்? இதனால் பல மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

(3ம் பக்கம் பார்க்க)

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணனந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.


# ‘குழப்பம் ஏற்பட்டால் நசுக்கிவிடுவோம்’

## பிரதமர் சிறிமா எச்சரிக்கை

கொழும்பு, மே 2

“தொழிலாளர் சங்கங்கள் அதிகார வேட்கைகொண்ட அரசியல் தலையீடுகளிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும். அப்படியல்லாவிடில், அரசியல் ஆயுதங்களாக இவர்கள் பாவிக்கப்படுவார்கள்” என்று நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவில் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில், பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:-

விசாக விழாவிற்குப் பின்பு கொழும்பில் குழப்பம் ஏற்படும் என்று கடந்த சில தினங்களாக சில சமூக விரோதிகளால் வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாக அறிந்தேன். 1958-ல் நடந்ததைப் போன்று இது இன்று நடைபெறுகிறது. ஆனால், நாட்டில் எந்தப் பகுதியிலாவது குழப்பம் எதுவும் ஏற்பட்டால், அதை அடக்க அரசாங்கம் கடுமையான, தீவிர நடவடிக்கைகளை எடுக்கும். எங்கு எந்த நெருக்கடி ஏற்பட்டாலும், அதைச் சமாளிக்க அரசாங்கம் தயாராகவே இருக்கிறது.

“காலம்சென்ற பிரதமர் மேதினத்தை விடுமுறையாக்கி சுதந்திரத் தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்கவும் பெருந்தொண்டாற்றினர்.

1956-லிருந்து தொழிலாளர் முன்னேற்றப்பாதையில் இறங்கிவிட்டனர். உரிமைகளும், பல சலுகைகளும் பெற்றுள்ள தொழிலாளர்கள், வேலைநிறுத்தங்களில் ஈடுபடாமல் உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட ஊக்கம் செலுத்த வேண்டும்.

நமது நாட்டின் முதுகெலும்பு போன்று இருக்கும் விவசாயிகள் வாழ்வு நல்வாழ்வாக மாற நாம் பாடுபட வேண்டும். பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமான திட்டங்கள் இருந்தால்தான் இது சாத்தியமாகும். இதற்காக, நானும் எனது அரசாங்கமும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறோம்.

இன்று மொழிப் பிரச்சினைகள், நிதிப் பிரச்சினைகள், வேலையின்மைப் பிரச்சினைகள் எமது நாட்டை எதிர்நோக்கியுள்ளன. பொருளாதார அபிவிருத்தி மூலம், இவைகளை நிரந்தரமாய்த் தீர்த்துவிடலாம்.

இறுதியாக பிரதமர் பேசுகையில், இந்நாட்டில் ஒரு சோஷலிஸ்ட் அரசாங்கத்தை அமைக்க உழைப்பதில் ஒவ்வொரு பிரஜையும் அக்கறை காட்ட வேண்டுமென்றும், பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும்

என்றும் இதனல்தான் சக்தி வாய்ந்த புதிய இலங்கையை நிர்மாணிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

# ‘தொழிலாளரின் பெரும் பொறுப்பு’

## தொழில் மந்திரியின் மேதினச் செய்தி

கொழும்பு, திங்கள்

“சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்குத் தீங்கு நேரிடாமலும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்காமலும் தொழில் தகராறுகளுக்குத் தீர்வு காண வேண்டும். எமது தொழிலாளர்கள் பூரண வாழ்வு வாழவும், நடைமுறைக்கு ஏற்ப உபயோகமாகவும் வாழ எமது அரசாங்கம் எதிர்பார்க்கிறது” என்று பதில் தொழில் மந்திரி திரு. எம். பி. டி. ஸட். சிறிவர்த்தன மேதினத்தையொட்டி தொழிலாளர்களுக்கு விடுத்த ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

“நாட்டை அபிவிருத்தி செய்வதுதான் எங்கள் நேர்மையான நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எமது தொழிலாள வகுப்பு மக்கள் பொறுப்பேற்க வேண்டும். இந்த நாட்டைச் சமாதானமாக்கவும்சுபீட்சமாக்கவும் மேதினமான இன்று எமது தொழிலாள மக்கள் உறுதியான தீர்மானங்களைச் செய்வர் என்று நாங்கள் நம்புகிறோம்.”

# அரசாங்க ஊழியர் சேவை கணக்கெடுப்பு

கொழும்பு, மே. 2

அரசாங்க ஊழியர் சேவை செய்த காலத்தையும் அவர்கள் சேவை செய்த இடங்களில் தொடர்ந்து சேவை செய்த காலத்தையும் அறிவதற்காக திறைசேரி கணக்கெடுக்கத் தொடங்கியுள்ளது.

ஒரு ஊழியர் ஓரிடத்தில் தொடர்ந்து நான்கு வருடங்கள் மட்டுமே வேலை செய்யலாம் என்ற விதி முறையாக அமுல் நடத்தப்படுவதில்லை என்று அரசாங்க ஊழியர் புகார் செய்ததின் காரணமாகவே திறைசேரி இவ்வித நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்தது.

இக்கணக்கெடுப்பு சம்பந்தமாக கவனிக்க திறைசேரியிலுள்ள ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வார முடிவுக்குள் இது சம்பந்தப்பட்ட வேலை முடிவடையுமெனத் தெரிகிறது.

---

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை நீக்கவேண்டும், அல்லது தளர்த்தவாவது வேண்டும்.

* * *

குழப்பம் எதுவும் ஏற்பட்டால் அதைக் கண்டிப்பாக அடக்குவோம் என்று பிரதமர் சிறிமா மேதினக் கூட்டத்தில் எச்சரித்ததைக்கேட்டு, கொழும்பிலிருந்து பயந்துவந்த நண்பர் ஓரளவு ஆறுதலடைந்தார்.

* * *

நான்கு வயதுக் குழந்தை. “பூவில் யாரப்பா இவ்வளவு வாசனை வைத்தது?” என்று கேட்டேன்.

“யானைக்குட்டி” என்ருன்.

“யானைக்குட்டியல்ல; சுவாமி தான் வைத்தது” என்றேன்.

“யானைக்குட்டியும் சுவாமி தானே” என்ருன் குழந்தை. பதில் என்ன சொல்வது?

# உலகெங்கும் மேதின விழா

## சீனவில் இராணுவ அணிவகுப்பு இல்லை

கொழும்பு, மே 2

உலகெங்கும் நேற்று மே தினம் கொண்டாடப்பட்டது.

கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கத்தின் ஆதரவில் சுதந்திர சதுக்கத்தில் மேதினக் கூட்டம் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவில் நகரமண்டபத்தில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையிலும் காலிமுக மைதானத்தில் டாக்டர் என். எம். பெரேராவின் தலைமையிலும், டிமெல் பார்க்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவிலுள்ள தொழிற் சங்கங்களின் ஆதரவிலும், ஹைட்பார்க் மைதானத்தில் மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவில் திரு. பிலிப் குணவர்த்தனவின் தலைமையிலும், கொட்டாஞ்சேனையில் இலங்கை தொழிற் கட்சியின் ஆதரவில் திரு. ஏ. ஈ. குணசிங்காவின் தலைமையிலும் மேதினக் கூட்டங்கள் நடைபெற்றன.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருப்பதால் ஊர்வலங்கள் நடத்த அனுமதிக்கப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இம்முறை மே தினம் கொண்டாடப்படவில்லை.

சென்னையில் மேதின ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

திருவனந்தபுரம, பம்பாய், கல்கத்தா மற்றும் பல நகரங்களிலும் மேதின ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

நவசீனவில் இரண்டாவது தடவையாக இம்முறை இராணுவ அணிவகுப்பு நடைபெறவில்லை. ● பீகிங்கில் முப்பது இலட்சம் மக்கள் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாஸ்கோவில் மாபெரும் இராணுவ அணிவகுப்பு வழமை போல் செஞ்சதுக்கத்தில் நடைபெற்றது.

---

# ஊர்காவற்றுறை

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

ஊர்காவற்றுறை, மே 2

ஊர்காவற்றுறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மஜீத் அண்மையில் இடமாற்றம் செய்யப்படுவது காரணமாக, அவரது கடந்த கால சேவைகளைப் பாராட்டிச் சென்ற சனிக்கிழமை ஓர் உபசரணைக் கூட்டம் நடத்தப்பட்டது.

வேலணைப் பொது மக்கள் சார்பில் கிராமச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராமச் சங்கத் தலைவர் திரு. ப கந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திரு. மஜீத்தை இடமாற்றம் செய்ய வேண்டாமென அரசினரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம், அன்று நடைபெற்ற வேலணைக் கிராமச் சங்க விஷேட கூட்டத்தில் நிறைவேறியது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தலைவர் திரு. ப. கந்தசாமி தந்தி மூலம் தீர்மானத்தை அனுப்பிவைத்தார்.

# ‘ஜெனிவா மகாநாட்டில் கம்போடியா பங்குபற்ருது’

## லாவோஸில் இன்னும் சண்டை நிறுத்தமில்லை; கென்னடி ஆலோசனை

வியன்டைன், மே. 2

லாவோஸ் சம்பந்தமாக இம் மாதம் 12ந் திகதி ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச கமிஷன் மகாநாட்டில் கம்போடியா கலந்துகொள்ள மாட்டாது என்று கம்போடிய பிரதமர் இளவரசர் நொரோடம் சிகானுக் அறிவித்துள்ளார்.

பதினன்கு நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சர்வதேச மகாநாடு கூடி லாவோஸ் நிலைமைக்குப் பரிகாரம் தேட வேண்டுமென்று முதன்முதலில் யோசனை கூறியது கம்போடியாதானென்பது குறிப்பிடத்தக்கது.

லாவோஸ் சம்பந்தமான 1954ம் வருடத்திய சர்வதேச கமிஷனின் தலைமை நாடுகளான பிரிட்டனும் ரஷ்யாவும் லாவோஸில் சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும் லாவோஸில் இரு பகுதியினரும் சண்டை நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தைகளை இன்னும் ஆரம்பிக்கவில்லை.

இம்மாதம் 12ந் திகதி ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் கம்போடியா கலந்துகொள்ளமாட்டாதென்ற செய்தி லாவோஸ் பிரச்னைக்குத் தீர்வுகாணக் கூடிய சூழ்நிலையைப் பாதித்துவிடக்கூடுமென்று லண்டனில் அரசாங்க வட்டாரங்களில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

லாவோஸ் பிரச்னைக்கு லாவோஸ் மக்களே தீர்வு காண வேண்டுமென்று லாவோஸ் மன்னர் சவன்ன வத்தன அபிப்பிராயம் தெரிவித்ததாகவும் 14 நாடுகள் கூடி லாவோஸ் நிலை குறித்து செய்யும் முடிவு லாவோஸ் உள்நாட்டு விவகாரங்களில் குறுக்கிடுவதாக இருக்குமென்று மன்னர் வத்தன கருதுவதாகவும் கம்போடிய இளவரசர் சிகானுக் தெரிவித்தார்.

இவர் சமீபத்தில் லாவோஸ் மன்னர் வத்தனவைச் சந்தித்துவிட்டுத் திரும்பினர்.

லாவோஸில் இம்மாதத்துக்குள் நிலைமை சீரடைந்துவிடுமென்றும் மன்னர் வத்தன நம்பிக்கை தெரிவித்தார்.

லாவோஸ் சண்டை நிறுத்தக் கமிஷன் நேரடியாக லாவோசுக்குச் செல்லவேண்டுமென்று பிரிட்டன் விரும்புவதாகவும் ஆனல் ரஷ்யா அதைத் தடைசெய்வதாகவும் லண்டன் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

### கென்னடி ஆலோசனை

லாவோஸ் நிலைமை குறித்து அமெரிக்க ஜனதிபதி கென்னடி தமது உயர்தர ஆலோசகர்களுடன் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர். செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடி ஆலோசனை நடைபெறுமென்று

(4-ம் பக்கம் பார்க்க)


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

**33
303
3003**
**ஊதுபத்திகளை**

உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜன்டுகள்:
**ஜெகஜோதி அன் கோ.**
குருநெனிய.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
**“லேடன்” தயாரிப்பு**
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.

**இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!**

அதற்கு வழி “லேடன்” பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
“லேடன்” பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஷோம்பேமீது விசாரணை நடைபெறும்

## லியப்போல்ட்வில்லி அரசாங்கம் நடவடிக்கை

லியப்போல்ட்வில்லி மே 2 காங்கோலிய துருப்புக்களினால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள கடாங்கா ஜனாதிபதி ஷோம்பே மீது விசாரணை நடத்த லியப்போல்ட்வில்லி அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது.

கொக்குயில் ஹத்வில்லியில் கைது செய்யப்பட்ட ஷோம்பே நேற்று நண்பகல்வரை அங்கேயே காவலில் வைக்கப்பட்டிருந்தாரென்றும் அதன்பின் லியப்போல்ட்வில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டாரென்றும் அங்கு இன்னும் சில காலம் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னரே அவர்மீது விசாரணை நடத்தப்படுமென்று திட்டமிடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கிறது.

இதற்கிடையில் ஷோம்பேயின் நிலைமைபற்றி கடாங்காவின் இரும்புமனிதன் என்று கருதப்படும் கடாங்கா மந்திரி மொலோங்கோ கடாங்கா அதிகாரிகளையும் மந்திரிகளையும் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டி ஆலோசனை செய்தார்.

ஷோம்பேயை விடுதலை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் முயற்சிசெய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் கன்ஸர்வேட்டிவ் கட்சி எம். பி. க்கள் சிலர் கேட்டுள்ளனர்.

சென்ற வெள்ளிக்கிழமை காங்கோலிய துருப்புக்களால் சிறைப் பிடிக்கப்பட்ட ஐ. நா. படையைச் சேர்ந்த கானா துருப்புக்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் காஸாய்மாகாணத்துக்கு விமானத்தில் புறப்பட்டுச் சென்றனர்.

---

### ஜெனிவா மகாநாட்டில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டு முடிவில் தெரிவிக்கப்பட்டது.

லாவோஸில் சண்டைநிறுத்தம் ஏற்பட அமெரிக்க, சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமென்றும் சண்டை நிறுத்தம் ஏற்படுவது இனி ரஷ்யப் பிரதமர் குருசேவின் கையில்தான் தங்கியுள்ளதென்றும் அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கென்னடியின் விசேஷ தூதர் திரு ஹரிமன் லாவோஸ் மன்னர் சவன்னவத்தனவை லுவாங்பிரபாங்கில் சந்தித்தார்.

---

### இந்தியாவுக்கு பிரிட்டனின் உதவி

புதுடில்லி, மே 2

இந்தியாவின் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு பிரிட்டன் 53 கோடி ருபாய் கடன் கொடுத்துதவுகிறது. இக்கடன் தொகை 40 கோடி ருபாய்க்கான ஒப்பந்தம், ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டது. 13 கோடி 30 லட்சம் ருபாய்க்கான ஒப்பந்தம் நேற்று புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது.

இத்தொகைகள் 25 வருடங்களில் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும். ஏழுவருடங்களின் பின் முதல் தடவையாக கடன் திருப்பிக் கொடுக்க ஆரம்பிக்கலாம்.

---

### ராஜமன்னர் ஓய்வு பெறுகிறார்

சென்னை, மே 2

சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. பி. வி. ராஜமன்னார் இம்மாதத்துடன் ஓய்வுபெற்றதும் திரு. எஸ். ராமச்சந்திர ஐயர் தலைமை நீதிபதியாக கடமையாற்றுவார்.

இம்மாதத்துடன் திரு. ராஜமன்னார் ஓய்வுபெறுகிறார்.

---

லாவோஸில் சண்டை நிறுத்தம் ஏற்படாவிட்டால் வெளியிலிருந்து உதவி கோரித்தானாக வேண்டும் என்று லாவோஸ் வலதுசாரித்தலைவர் திரு. ஹரிமனிடம் தெரிவித்தார்.

---

தேர்தல் ஆட்சேபம்

### 'ஒருவருஷ மாகியும் விசாரணை இல்லை'

### டாக்டர் என். எம். கண்டனம்

"சென்ற பொதுத்தேர்தல் நடந்து ஒருவருடமாகப் போகின்றது. அத்தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து செய்து கொள்ளப்பட்ட மனுக்கள் மீது இன்னும் விசாரணை நடவாதது ஜனநாயக தர்மமாகாது. உலகில் எங்கும் இப்படித் தவக்கம் கிடையாது" என்றிவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தெரிவிக்கிறார். அவர் மேலும் கூறுவதாவது:-

"ஒரு எம். பி. யின் தேர்தலைப்பற்றி ஆட்சேபம் எழுந்துள்ளபோது அவரைத் தொடர்ந்து பார்லிமெண்ட் சபையில் விசாரணையின்றி இருக்கச்செய்வது அர்த்தமற்றது. முன்னாள் பிரதமரான திரு. பண்டாரநாயகாவுடன் இதைப்பற்றி பேசினேன். தேர்தல் மனுக்களை மூன்று மாதங்களுக்குள் விசாரிக்க வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமான எந்தச் சட்டத்தையும் சீர்செய்ய அரசாங்கத்துக்குப் போதிய அவகாசமிருந்துள்ளது. இவ்விஷயத்தை நான் பார்லிமெண்ட் சபையில் எழுப்பப் போகிறேன்.

நீர்கொழும்பு, கொழும்பு வடக்கு எம். பி. க்களுக்கு மாறாக அனுப்பப்பட்டுள்ள மனுக்கள். வாக்குச்சீட்டுகளை மீண்டும் புதிதாக எண்ண வேண்டுமென்றே கேட்டுள்ளன. அவ்விஷயத்தில் இவ்வளவு தவக்கம் தேவையே இல்லை.

---

### புதிய சமாதான நீதிபதிகள்

ஊர்காவற்றுறை, மே 2

நாரந்தனை, வேலணை கிராமச் சங்கத் தலைவர்களான திரு. கதிரித்தம்பி, திரு. கந்தசாமி ஆகிய இருவரும் புதிய சமாதான நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

---


## திருமணம்

### தியாகலிங்கம் — சிவநேசம்

கொழும்பு "சரஸ்வதி ஒயில் மில்ஸ்" கூட்டுச் சொந்தக்காரர் திரு ராமநாதன் செட்டியார் அவர்களின் மகன் **தியாகலிங்கம்** அவர்களுக்கும், யாழ்ப்பாணம், பெரியகடை வர்த்தகர் திரு. ராமையாச் செட்டியார் அவர்களின் மகள் **சிவநேசத்திற்கும்** வரும் 6-5-61 சனிக்கிழமை காலை 8-30 — 9-15 மணிக்கிடையில் மணமகளில்லத்தில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்படுகின்றனர். தனித்தனி அழைப்பாக இதை ஏற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| சி. ராமையாச் செட்டியார் | கே. ராமநாதன் செட்டியார் |
| "மனோன்மணி வாசா" | "சரஸ்வதி ஒயில் மில்ஸ்" |
| 236/5, ஆஸ்பத்திரி வீதி, | ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, |
| யாழ்ப்பாணம். | கொழும்பு. |



மகத்தான 3-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) மொடர்ன் (பதுளை)

தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல) விஜிதா (மஸ்கேலிய) லக்ஷ்மி (இரத்தினபுரி)

எஸ். எஸ்: ராஜேந்திரன், பி. சரோஜாதேவி, அசோகன், ஈ. வி. சரோஜா, நாகையா, கண்ணாம்பா, தங்கவேலு, எம். சரோஜா, ராமராவ், மாலதி

நடித்த

# மணப்பந்தல்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) № 04237

ஜெமினி கணேசன் - சரோஜாதேவி

தங்கவேலு - எம். சரோஜா

ஆகியோர் திறம்பட நடித்த

# கல்யாண பரிசு

காலை 10 மணிக்கு ஒரே காட்சி.

குறிப்பு: தவிர்க்கமுடியாத சில காரணங்களால் மறு அறிவித்தல் வரை மணப்பந்தல் திரையிடப்பெற மாட்டாது.




மனோஹரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன் - சாவித்திரி நடித்த

# காத்தவராயன்

தினசரி காலை 10 மணிக்கு ஒரே காட்சி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.